0030 39

15 APR 2025

**கல்லூரிக் கல்வி ஆணையர் அவர்களின் செயல்முறைகள், சென்னை – 15**

**பிறப்பிப்பவர் : எ.சுந்தரவல்லி இ.ஆ.ப.,**

**ந.க.எண்.TNDCE/950/2025-B3 நாள்.10–04–2025**

| | |
|---|---|
| பொருள்: | தமிழ்நாடு அமைச்சுப்பணி – 2022–2023 ஆம் ஆண்டு உதவியாளர் பதவி உயர்வுக்கான தகுதிவாய்ந்தோர் பெயர் பட்டியல் வெளியிடப்பட்டமை – தற்காலிக உதவியாளர்களாக நியமனம் செய்யப்பட்ட பணியாளர்கள் பணியினை வரன்முறைப் படுத்துதல் – ஆணை வழங்குதல் – தொடர்பாக. |
| பார்வை: | 1. கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 11339/பி3/2023 நாள். 24.05.2023.<br>2. கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 11339/பி3/2023–2 நாள். 25.09.2023.<br>3. கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 11339/பி3/2023–3 நாள். 14.11.2023.<br>4. இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண். 41864/பி1/2023, நாள்.06.11.2023. |

........

பார்வை(1,2,3)யில் காணும் செயல்முறைகளில் 2022–2023 ஆம் ஆண்டிற்கான உதவியாளர் பதவி உயர்வுக்கு தகுதிவாய்ந்த 149 இளநிலை உதவியாளர் / தட்டச்சர் / பண்டக காப்பாளர்களுக்கு உதவியாளர்களாக பதவி உயர்வு வழங்கி ஆணையிடப்பட்டது. இதில் பார்வை –1ல் காணும் செயல்முறையில் வரிசை எண்.87 இல் இடம் பெற்றுள்ள திருமதி. இ.அனுஷா என்பார் ஊதியமில்லா விடுப்பில் வெளிநாடு சென்றுள்ளதால் இதுநாள் வரையில் பதவி உயர்வு வழங்கப்பட்ட பணியிடத்தில் பணியில் சேரவில்லை. மேலும் வரிசை எண்.93ல் இடம் பெற்றுள்ள திருமதி. எஸ். வள்ளி புவனேஸ்வரி என்பார் பதவி உயர்வு துறப்பு செய்துள்ளார். பார்வை –2ல் காணும் செயல்முறையில் வரிசை எண்.5 இல் இடம் பெற்றுள்ள திரு.எஸ். வித்தேஷ் என்பார் பதவி உயர்வு துறப்பு செய்துள்ளார். இப்பணியார்களை தவிர்த்து இதர 146 பணியாளர்கள் உதவியாளர்களாக பணியில் சேர்ந்துள்ளனர். இவர்களது பணிசேர் அறிக்கையானது சார்ந்த இணை இயக்குநர் அலுவலகம் / கல்லூரிகளிலிருந்து பெறப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தகுதியின் அடிப்படையில் (as per merit) முதுநிலை நிர்ணயம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, பார்வை-4ல் காணும் இவ்வலுவலக செயல்முறைகள் மூலம் 2022-2023 ஆம் ஆண்டு உதவியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ள பணியாளர்களின் முதுநிலை மாற்றியமைத்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், தற்காலிகமாக உதவியாளர்களாக நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வரும் இச்செயல்முறையின் இணைப்பில் கண்டுள்ள உதவியாளர்களுக்கு அவர்களது பெயருக்கு எதிராக குறிப்பிட்ட நாள் முதல் உதவியாளர் பணி நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

தட்டச்சர் / பண்டகக்காப்பாளர் பதவியிலிருந்து உதவியாளராக பதவி உயர்வு செய்யப்பட்டவர்கள் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 35 (ab)ன்படி பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி முடித்த பின்னரே உதவியாளர் பணி நிலையில் அடுத்த ஆண்டு ஊதிய உயர்வு அனுமதிக்கப்பட வேண்டுமென தெரிவிக்கலாகிறது.

இச்செயல்முறைகள் பெற்றமைக்கு பெறல் ஏற்பினையும், பணிவரன்முறை செய்யப்பட்டது குறித்த பதிவுகளை சம்பந்தப்பட்ட உதவியாளர்களின் பணிப்பதிவேட்டில் உடனடியாக பதிவு செய்யுமாறு அறிவிக்கலாகிறது.

**E. SUNDARAVALLI**
**COMMISSIONER_HO_TNDCE**

**பெறுநர்:**
இணைப்பில் உள்ள பணியாளர்கள் – ( உரிய வழியாக.)

**நகல்:**

1. இணைப்பில் உள்ள கல்லூரி முதல்வர்கள்,
2. இணைப்பில் உள்ள மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள்,
3. இயக்கக "அ" பிரிவு.
4. இருப்புக் கோப்பு

Signed by Manikandan
Date: 11-04-2025 10:40:13

ந.க.எண்: 3039/அ1/2025, நாள்: 09.04.2025

நகல் தகவலுக்காக வழங்கலாகிறது.

ம. கண்ணம்மாள்
கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்
திருநெல்வேலி மண்டலம்
திருநெல்வேலி-627 008.

பெறுநர்
சார்ந்த உதவியாளர்கள்